
**1.** நான்கு குவளைகளின் ஐந்து உருக்கள் A, B, C, D, E ஆகியவற்றினாற் காட்டப்பட்டுள்ளன.




A B C D E

அவற்றில் ஒரே குவளையைக் காட்டும் இரு உருக்களும் யாவை?


(1) A உம் D உம் (2) B உம் C உம் (3) C உம் E உம்

**2.** பின்வரும் உருவில் உள்ள பாதணிகளிடையே ஒன்றோடொன்று பொருந்தும் பாதணிகளின் எத்தனை சோடிகளை ஒரே தடவையில் வேறுபடுத்தலாம்?




(1) 4
(2) 5
(3) 6

**3.** கடதாசி மீது இருந்து பென்சிலை வெளியே எடுக்காமல் ஒரே பாதையில் ஒரு தடவைக்கு மேற்படச் செல்லாமல் இவ்வுருவை வரைய வேண்டியுள்ளது. உருவை வரைதலை எந்த இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்?




(1) A
(2) B
(3) C

**4.** தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைத் தயார்செய்வதற்கு A, B, C, D ஆகிய உருப் பகுதிகளில் எந்த இரு உருப் பகுதிகளைப் பயன்படுத்த வேண்டும்?



A B C D

(1) A உம் D உம் (2) B உம் C உம் (3) B உம் D உம்

**5.** பெரியோர் சிறியோர் எல்லோரிடமும் நானிருப்பேன்
தேவையான போது வெளியில் வருவேன்
இதமான உணர்வு தந்து ஆறுதல் அளித்ததுமே
எனது தூய்மை அழிந்து போகுமே

இந்த வரிகளின் கருத்துக்கு மிக நன்றாகப் பொருந்துவது

(1) கண்ணாடி (2) சீப்பு (3) கைக்குட்டை


6. 1 2 3 4 5, 6 2 1 4 5, 1 7 8 4 5 என்னும் மூன்று குறியீட்டுக் கூட்டங்களுக்கும் முறையே பொருத்தமான சொற்கள் இடம்பெறும் விடை யாது?

(1) கொத்திவில், துக்கொவில், கொக்குவில்

(2) கொக்குவில், கொத்திவில், துக்கொவில்

(3) கொக்குவில், துக்கொவில், கொத்திவில்

7. பின்வரும் விவரத்திற்கேற்ப எமது கிராமம் பற்றித் தயாரிக்கப்பட்டுள்ள சரியான பரும்படிப் படம் யாது? எமது கிராமம் ஒரு மலைச்சாரலின் அடியில் உள்ளது. கிராமத்தின் கீழ் அந்தத்தில் ஓர் ஆறு பாய்ந்து இறங்கும் அதே வேளை மலைச்சாரலிலிருந்து கிராமத்தின் நடுவில் பாய்ந்து இறங்கும் ஒரு கால்வாய் கிராமத்தின் அந்தத்தில் ஆறுடன் சேர்கின்றது. எமது கிராமத்தில் ஓர் அழகான அருவியும் உள்ளது. எமது வீடு அருவிக்குக் கிழக்கேயும் பாடசாலைக்கு மேற்கேயும் உள்ளது.



(1)




(2)




(3)

8. அமல், பிமல், சமல் ஆகிய மூவரினதும் வீடுகளின் அமைவு தரப்பட்டுள்ள பரும்படிப் படத்தில் முறையே A, B, C இனாலும் அவ்வீடுகளைத் தொடுக்கும் பயணப் பாதை வட்டத்தினாலும் காட்டப்பட்டுள்ளன. அவர்கள் மூவரும் தமது வீடுகளிலிருந்து ஒரே நேரத்திற் புறப்பட்டு, அம்புக் குறிகளினாற் காட்டப்படும் திசையில் ஒரே கதியில் வட்டப் பாதை வழியே வருகின்றனர். யார் ஏனைய இருவரினதும் வீடுகளை முதலிற் கடந்து செல்வார்?




(1) அமல் (2) பிமல் (3) சமல்

9. இவ்வுருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?




(1) 5

(2) 10


(3) 15

10. ஒரு சதுரமுகியின் ஆறு முகங்களின் மீதும் 1, 2, 3, 4, 5, 6 என்னும் இலக்கங்கள், ஒவ்வொரு முகத்தின் மீதும் ஓர் இலக்கம் வீதமும் ஒன்றுக்கொன்று எதிரேயுள்ள முகங்களின் மீது இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 7 ஆகவும் இருக்குமாறு, உள்ளன. சதுரமுகியின் எந்தவொரு முகத்தையும் அடுத்துள்ள நான்கு முகங்களின் மீதும் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?




(1) 10 (2) 14 (3) 15

11. ஒரு தராசின் மூலம் A, B, C என்னும் பொருள்களின் நிறைகள் அளக்கப்பட்ட மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.




அதற்கேற்ப A, B, C ஆகிய மூன்று பொருள்களினதும் நிறைகள் முறையே

(1) 450 g, 550 g, 500 g ஆகும்.

(2) 450 g, 650 g, 600 g ஆகும்.

(3) 600 g, 800 g, 750 g ஆகும்.

Past Papers Wiki

**12.** 1 தொடக்கம் 9 வரை இலக்கங்கள் இடப்பட்ட 9 குமிழ்கள் வீதம் இருக்கும் A, B என்னும் இரு பலகைகள் உருவில் உள்ளன.

பலகை A ① ② ③ ④ ⑤ ⑥ ⑦ ⑧ ⑨

பலகை B ⑥ ⑤ ⑨ ② ⑦ ⑧ ④ ① ③


பலகை A இல் உள்ள ஒரு குமிழ் ஒளிரும்போது அதற்கு இசைவாகப் பலகை B இல் உள்ள ஒரு குமிழ் (அதாவது பலகை A இல் ① உடன் பலகை B இல் ⑥, பலகை A இல் ② உடன் பலகை B இல் ⑤, ... என்றவாறு) ஒளிரும். பலகை A இல் உள்ள எந்த நான்கு குமிழ்கள் ஒளிரும்போது இரு பலகைகளிலும் அதே இலக்கங்கள் உள்ள குமிழ்கள் ஒளிரும்?

(1) ①, ③, ⑥, ⑧ (2) ②, ④, ⑤, ⑦ (3) ③, ④, ⑤, ⑨

**13.** முரளி பாடசாலைப் பேருந்தில் ஏறுவதற்கு 25 நிமிடங்களுக்கு முன்பாக ரேவதி அதில் ஏறினாள். சங்கரி வரும் வரைக்கும் அப்பேருந்து சங்கரியின் தரிப்பிடத்தில் 2 நிமிடங்களுக்கு நிற்பாட்டப்பட்டிருந்தது. சங்கரி ஏறி 5 நிமிடங்களுக்குப் பின்னர் முரளி பேருந்தில் ஏறினான். ரேவதி பேருந்தில் மு.ப. 7.00 இற்கு ஏறினாள் எனின், சங்கரியின் தரிப்பிடத்திற்குப் பேருந்து வந்த நேரம் யாது?


(1) மு.ப. 7.18 (2) மு.ப. 7.22 (3) மு.ப. 7.23

**14.** 15 பிள்ளைகள் நிரைகளுக்கிடையே உள்ள தூரங்கள் சமமாக இருக்குமாறு உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு நிற்கின்றனர். அவர்களிடையே தமக்கு வடக்கு, கிழக்கு ஆகிய இரு திசைகளிலும் குறைந்தபட்சம் ஒரு பிள்ளை வீதமேனும் நிற்கும் எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?




(1) 5 (2) 8 (3) 10

**15.** உருவில் உள்ள மூன்று வட்டங்களும் ஒரே அளவுள்ளன எனின், A இற்கும் B இற்குமிடையே உள்ள தூரம் எத்தனை சிறிய சதுரங்களின் நீளத்திற்குச் சமம்?





(1) மூன்று

(2) நான்கு

(3) ஐந்து

**16.** மூன்று ஒத்த செவ்வகங்களைப் பயன்படுத்தி வரையப்பட்டுள்ள இவ்வுருவின் சுற்றளவு ஒரு செவ்வகத்தின் சுற்றளவின்



(1) சரியாக இரண்டு மடங்காகும்.

(2) இரண்டு மடங்கை விடக் குறைவாகும்.

(3) இரண்டு மடங்கை விட அதிகமாகும்.

**17.** ஒரு குறித்த மாதத்தில் 9, 13, 17 என்னும் மூன்று திகதிகள் வரும் தினங்களில் இரண்டு தினங்கள் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் ஆகும். மற்றைய தினம் எந்த நாளாகும்?

(1) புதன்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

**18.** நண்பர்களின் குழு ஒன்று ஒரு பந்தை வாங்குவதற்கு ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 10 வீதம் சேர்த்தபோது ரூ. 5 குறைவாக இருந்தது. ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 12 ஐச் சேர்த்தபோது ரூ. 5 எஞ்சியிருந்தது. குழுவில் உள்ள நண்பர்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

19. ஒரு வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவனும் வாரத்தில் பாடசாலை நடைபெறும் ஐந்து தினங்களில் அடுத்துள்ள மூன்று தினங்களுக்கு விளையாட்டுப் பயிற்சியில் பங்குபற்றுதல் வேண்டும். ஒரு குறித்த வாரத்தில் வினுக்கன், தனுக்கன், சனுக்கன் ஆகிய மாணவர்கள் மூவரும் விளையாட்டுப் பயிற்சியில் பங்குபற்றிய ஒரே ஒரு தினம் மாத்திரமே இருந்தது. எனின், அவ்வாரத்தில் அவர்களில் இருவர் வீதம் விளையாட்டுப் பயிற்சியில் பங்குபற்றிய தினங்களின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 3 (3) 4

20.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முதலாம் நிரை | : | 1 | 6 | 7 | ... | ... |
| இரண்டாம் நிரை | : | 2 | 5 | 8 | ... | ... |
| மூன்றாம் நிரை | : | 3 | 4 | 9 | 10 | ... |


மேற்குறித்த கோலத்திற்கேற்ப எண்களை எழுதும்போது 31 எந்த நிரையில் எழுதப்பட வேண்டும்?

(1) முதலாம் நிரை (2) இரண்டாம் நிரை (3) மூன்றாம் நிரை

21. ஒரு சுவர்க் கடிகாரத்தின் முகத்தில் எல்லா எண்களும் i, v, x ஆகிய உரோமன் இலக்கங்களைக் கொண்டு நியம முறையில் எழுதப்பட்டுள்ளன. அதில் i, v, x ஆகிய இலக்கங்கள் இடப்பட்டுள்ள தடவைகளின் எண்ணிக்கைகள் முறையே

(1) 14, 4, 3 ஆகும். (2) 17, 4, 4 ஆகும். (3) 17, 5, 4 ஆகும்.

22. அதிரசம், கொக்கிஸ், அலுவா, ஆஸ்மி, கேக், தொதொல் ஆகியன வேறுவேறாக அடங்கும் ஆறு ஒத்த பெட்டிகள் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு மேசை மீது அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.


மேசை

※ கொக்கிஸ் பெட்டி நான்கு பெட்டிகளைத் தொடுகின்றது.

※ ஆஸ்மிப் பெட்டி தொதொல் பெட்டியையும் கேக் பெட்டியையும் மாத்திரம் தொடுகின்றது.

ஆகவும் மேலே உள்ள பெட்டியில் இருப்பது யாது?

(1) ஆஸ்மி (2) அதிரசம் (3) அலுவா

23. பின்வருவன குறித்த ஒரு சம்பவத்தின் ஐந்து நிகழ்வுகளாகும்.

a - நாய் வீதியில் அங்கும் இங்கும் ஓடியது.

b - ஒரு பந்திற்குப் பின்னால் சிறுவன் ஒருவன் விரைவாக ஓடிக்கொண்டு வந்தான்.

c - வீதி வழியே விரைவாக வந்த ஒரு வாகனம் தடுப்புகளை ஒரே தடவையில் பிரயோகித்தது.


d - பந்தைப் பொறுக்கிய சிறுவன் வீதியிலிருந்து அப்பாற் சென்றான்.

e - பந்து புரண்டுபோய் வீதியில் படுத்திருந்த நாயின் உடம்பில் பட்டது.

இந்நிகழ்வுகளின் மிகவும் பொருத்தமான ஒழுங்குமுறை யாது?

(1) e, c, a, b, d (2) b, e, a, d, c (3) b, e, a, c, d

24. குறித்த ஒரு நாளில் இடம்பெற்ற நிகழ்வின் நான்கு சந்தர்ப்பங்கள் A, B, C, D ஆகிய உருக்களினாற் காட்டப்பட்டுள்ளன.



A B C D

அந்நிகழ்வைச் சரியாகக் காட்டுவதற்கு உருக்கள் இருக்க வேண்டிய ஒழுங்குமுறை யாது?


(1) B, D, A, C (2) B, D, C, A (3) D, B, C, A

Past Papers Wiki


**25.**





மேற்குறித்த கோலத்திற்கேற்ப ? குறியினாற் காட்டப்படும் முக்கோணிக்கு உரிய உரு யாது?



(1)




(2)



(3)

**26.** A இல் உள்ள எண்களின் கூட்டுத்தொகையும் B இல் உள்ள எண்களின் கூட்டுத்தொகையும் சமமாக இருக்குமாறு A இற்கும் B இற்குமிடையே எண்களைக் குறைந்தபட்ச எண்ணிக்கையில் இடைமாற்றுதல் வேண்டும். அதற்காகச் செய்ய வேண்டியது




(1) A இல் உள்ள சிறிய எண்ணை B இற்குக் கொடுத்தல் மாத்திரம்.

(2) A இலிருந்து ஓர் எண்ணை B இற்கும் B இலிருந்து ஓர் எண்ணை A இற்கும் கொடுத்தல்.

(3) A இலிருந்து இரு எண்களை B இற்கும் B இலிருந்து ஓர் எண்ணை A இற்கும் கொடுத்தல்.

**27.** ஒரே நிரையில் நிற்கும் 11 மாணவர்களில் 1, 3, 5, 7, 9, 11 ஆகிய இடங்களில் நிற்பவர்கள் முற்பக்கத்தை நோக்கியும் ஏனையோர் பிற்பக்கத்தை நோக்கியும் நிற்கின்றனர்.

முதலாம் கைதட்டலில் 1 ஆம் மாணவனும் 11 ஆம் மாணவனும் மாத்திரம் பின்னோக்கித் திரும்புகின்றனர்.


இரண்டாம் கைதட்டலில் 2 ஆம் மாணவனும் 10 ஆம் மாணவனும் மாத்திரம் முன்னோக்கித் திரும்புகின்றனர்.

மூன்றாம் கைதட்டலில் 3 ஆம் மாணவனும் 9 ஆம் மாணவனும் மாத்திரம் பின்னோக்கித் திரும்புகின்றனர்.

இவ்வாறாக அடுத்தடுத்து நிற்கும் மூன்று மாணவர்களும் ஒரே பக்கத்திற்குத் திரும்பும் சந்தர்ப்பம் முதன்முதலில் எத்தனையாவது கைதட்டலில் ஏற்படும்?


(1) நான்காம் (2) ஐந்தாம் (3) ஆறாம்

**28.** 485, 707, 747, 27265 என்னும் எண்கள் கீழ்நோக்கியும் 46, 75, 7274, 7275 என்னும் எண்கள் குறுக்கேயும் இருக்குமாறு நெய்யரி பூரணப்படுத்தப்படும்போது அதன் இரண்டாம் நிரையில் குறுக்கே கிடைக்கும் எண் யாது?



(1) 707 (2) 708 (3) 748

**29.** பின்வரும் வடிவத்தை முக்கோணி வடிவமாகப் பூரணப்படுத்துவதற்குத் தரப்பட்டுள்ளவாறான சிறிய சதுர வடிவங்களிலும் முக்கோணி வடிவங்களிலும் எத்தனையைக் குறைந்தபட்சம் அதனுடன் சேர்த்தல் வேண்டும்?




(1) 1 சதுரமும் 4 முக்கோணிகளும்

(2) 2 சதுரங்களும் 3 முக்கோணிகளும்

(3) 3 சதுரங்களும் 2 முக்கோணிகளும்

**30.** A, B, C என்னும் மூன்று கம்பிகளை வளைத்துத் தயார்செய்யப்பட்ட மூன்று சட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.





A B C

இவற்றில் நீளங்கூடிய கம்பி யாது?

(1) A (2) B (3) C

**31.** ஒரு சிறுவன் தனது வீட்டிற்கு முன்னால் உள்ள வீதியில் ஒரு மணித்தியாலத்திற் சென்ற வாகனங்கள் பற்றிப் பின்வருமாறு ஒரு குறிப்பைத் தயாரித்தான். அவன் அவை சென்ற திசையை இனங்காண்பதற்கு ⟶ குறியீட்டையும் பயன்படுத்தினான்.




ஏழாவது வாகனமாக நகரத்தை நோக்கிய பேருந்து சென்றது. அது   இனால் குறிக்கப்படுமெனின், பின்வரும் கூற்றுகளில் மிகச் சரியான கூற்று யாது?

(1) நகரத்தின் திசையிலிருந்து மூன்று வாகனங்கள் மாத்திரம் வந்துள்ளன.

(2) மோட்டர்ச் சைக்கிள்கள் எல்லாம் நகரத்தை நோக்கியே சென்றுள்ளன.

(3) முதல் அரை மணித்தியாலத்தில் 5 வாகனங்கள் மாத்திரம் சென்றுள்ளன.

**32.** மாணவர் குழு ஒன்றின் தலைவியாக அக்குழுவின் மோகனா தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். எஞ்சிய மாணவர்களில் ஓர் உப தலைவியும் ஓர் உப தலைவனும் தெரிந்தெடுக்கப்படத்தக்க விதங்களின் எண்ணிக்கை 6 ஆகும். அதற்கேற்ப, அக்குழுவில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் முறையே

(1) 2, 3 ஆகும். (2) 2, 4 ஆகும். (3) 3, 3 ஆகும்.

**33.** சுழிக்காற்றுப் பற்றிய செய்தியைக் கேள்விப்பட்ட திரு. ஜெயராம் தனது குடும்பம் பொழுதுபோக்கிற்காகச் சுற்றுலாவிற் கடற்கரை விடுமுறை இல்லத்திற்குச் செல்வதற்குப் பதிலாக மலைநாட்டில் உள்ள அழகான புராதன அலங்காரக் கட்டடங்களை இரசிப்பதற்கும் அங்கு தங்கியிருக்கும் இடத்தை ஒதுக்கிக் கொள்வதற்கும் தீர்மானித்தார். அது சிறிதளவில் விலை கூடியதாக இருக்கின்றபோதிலும் குறுகிய கால அறிவித்தலுடன் அதனை ஒதுக்கிக் கொள்ளல் அவருக்கு மிகவும் வசதியாக இருந்தது.

இப்பந்திக்கேற்பப் பின்வரும் எக்கூற்று மிகவும் சரியானது?

(1) மலைநாட்டில் உள்ள கட்டடம் மிகப் பழையது ஆகையால் அதன் விலை கூடியதாகும்.

(2) திரு. ஜெயராம் பணக்காரர் ஆகையால், அவர் குடும்பச் சுற்றுலாவைத் திட்டமிட்டுள்ளார்.

(3) திரு. ஜெயராம் சுழிக்காற்றுக் காரணமாகச் சுற்றுலாத் திட்டத்தை மாற்றினார்.

**34.** ஒரு பாத்திரத்தில் $\frac{1}{4}$ இற்குச் சீனியை இட்டதும் அவற்றின் நிறை 300 g ஆகும். அதனை முற்றாகச் சீனியினால் நிரப்பும்போது நிறை 900 g ஆகும். வெறும் பாத்திரத்தின் நிறை யாது?

(1) 200 g (2) 100 g (3) 75 g

**35.** ஒரு பரிசுப் பொதி பின்வருமாறு மூன்று பொருள்கள் அடங்கத்தக்கதாகத் தயார்செய்யப்படுகின்றது.

* ஒரு தனிக் கோட்டுப் புத்தகம் அல்லது சதுரக் கோட்டுப் புத்தகம்
* ஒரு பேனை அல்லது ஒரு பென்சில்
* ஓர் அடிமட்டம் அல்லது ஓர் அழிறப்பர்

இதற்கேற்ப ஒன்றிலிருந்தொன்று வேறுபடுமாறு எத்தனை விதங்களில் பரிசுப் பொதியைத் தயார் செய்யலாம்?

(1) 3 (2) 6 (3) 8

**36.** பின்வரும் A, B, C, D என்னும் எண் அட்டைகளைப் பார்க்க.



படிமுறை 1:- எண் அட்டை A ஐக் கிடையாக வைக்க.

படிமுறை 2:- A இல் உள்ள 6 மீது B இல் உள்ள 6 இருக்குமாறு எண் அட்டை B ஐ நிலைக்குத்தாக வைக்க.

படிமுறை 3:- B இல் உள்ள 5 மீது C இல் உள்ள 5 இருக்குமாறு எண் அட்டை C ஐக் கிடையாக வைக்க.

படிமுறை 4:- A இல் உள்ள 7, C இல் உள்ள 4 ஆகியவற்றின் மீது D இல் உள்ள 7, 4 ஆகியன இருக்குமாறு எண் அட்டை D ஐ வைக்க.

மேற்குறித்த படிமுறைகளைப் பின்பற்றிய பின்னர் எண் அட்டைகளின் அமைவு இருக்கும் விதத்தைக் காட்டும் உரு யாது?

| | | |
|---|---|---|
| | 5 | 8 |
| 8 | 7 | 5 |
| 4 | 7 | 6 |

(1)

| | | |
|---|---|---|
| | 5 | 5 |
| 5 | 4 | 8 |
| 4 | 7 | 6 |

(2)

| | | |
|---|---|---|
| | 5 | 8 |
| 8 | 4 | 5 |
| 4 | 7 | 6 |

(3)

**37.** உருவில் உள்ள நெய்யரியை ஒரு பகுதியில் மூன்று எண்கள் வீதம் இருக்குமாறு மூன்று பகுதிகளாக வெட்டி வேறுபடுத்தும்போது ஒரு பகுதியில் இடம்பெறும் எண்களின் கூட்டுத்தொகை 20 ஆகும். மற்றைய இரு பகுதிகளிலும் இடம்பெறும் எண்களின் கூட்டுத்தொகைகளை வேறுவேறாக எடுக்கும்போது அவை

| | | |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 6 | 5 | 4 |
| 7 | 8 | 9 |


(1) 9, 16 ஆகும். (2) 10, 15 ஆகும். (3) 11, 14 ஆகும்.

**38.** பாடசாலையில் நடைபெற்ற சிரமதானத்தில் தரம் 5 மாணவர்களின் பங்குபற்றுகை பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.


வகுப்பு A இலிருந்தும் வகுப்பு B இலிருந்தும் வந்த மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆகும்.
வகுப்பு C இலிருந்தும் வகுப்பு D இலிருந்தும் வந்த மாணவர்களின் எண்ணிக்கை 33 ஆகும்.
வகுப்பு B இலிருந்தும் வகுப்பு C இலிருந்தும் வந்த மாணவர்களின் எண்ணிக்கை 17 ஆகும்.
இதற்கேற்ப, வகுப்பு A இலிருந்தும் வகுப்பு D இலிருந்தும் வந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 22 (2) 27 (3) 39

**39.** ஒரு சதுரமுகிக் கூட்டத்தில் உள்ள சிறிய சதுரமுகிகளை ஒன்றோடொன்று இணைத்து உருவாக்கிய ஓர் அமைப்பு முதலாம் உருவிலும் அது ஓர் அரைச் சுற்றுக்குச் சுழற்றப்படும்போது காணப்படும் விதம் இரண்டாம் உருவிலும் தரப்பட்டுள்ளன.



முதலாம் உரு



இரண்டாம் உரு

அமைப்பில் உயர்ந்தபட்சம் இருக்கத்தக்க சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?

(1) 17 (2) 18 (3) 19

**40.** நிமலைப் போன்று அமல் மாம்பழங்களை மாத்திரம் விரும்புபவன் அன்று. Ⓐ ......... உம் வேறு பழங்களை விரும்பாத சுனிலும் தோடம்பழங்களை விரும்புகின்றனர். அன்னாசி Ⓑ ......... விரும்பும் ஒரு பழமன்று.

இப்பந்தியில் Ⓐ, Ⓑ ஆகிய வெற்றிடங்களுக்கு முறையே பொருத்தமான சொற் சோடி யாது?

(1) நிமல், சுனில் (2) நிமல், அமல் (3) அமல், சுனில்

1. பின்வரும் உரைப்பகுதியை வாசிக்குக.

சுமதி தனது நண்பர்களுடன் தரம் மூன்றில் அவர்கள் கற்கும்போது நட்ட பூக்கன்றுகள் பழமரங்கள் என்பவற்றுக்கு ஊடாக வகுப்பறைப் பக்கம் சென்று கொண்டிருந்தாள். தேனருவி ஆரம்பப் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் இந்த மாணவர்கள் அடுத்த ஆண்டு புதிய பாடசாலைக்குச் செல்ல உள்ளனர்.

பூக்கள் மற்றும் பழங்கள் நிறைந்த மரங்களுக்கு இடையில் சென்று கொண்டிருந்தபோது அவர்களுக்குப் பாடசாலையை விட்டு விலகிச்சென்ற அகிலன் பற்றி நினைவுக்கு வந்தது. அதற்கான காரணம் அவர்கள் இந்த மரங்களை நடும்போது அவரே தலைமை வகித்தவராக இருந்தமை ஆகும். அப்போது சுமதி "அகிலனைப் போல வேறு பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னர் நாங்களும் புதிதாக ஒன்றைச் செய்ய வேண்டும்" என்று ஆலோசனை கூறினாள். அதற்கேற்பப் பாடசாலையின் பிரதான மண்டபத்தின் இரண்டு சுவர்களில் உலகப் படத்தையும் இலங்கைப் படத்தையும் வரைவோம் என்பது தர்சினியின் யோசனையாக இருந்தது. அந்த யோசனையை வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களுடனும் கலந்துரையாடிய போது அவர்களும் அதற்குச் சம்மதித்தனர். அது பற்றி மாணவர்கள் வகுப்பாசிரியைக்குத் தெரிவித்தனர். அந்தக் கருத்தினை ஏற்றுக்கொண்ட ஆசிரியை அதற்கு மதிப்பளித்ததுடன் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கினார். இறுதியில் இந்தக் கருத்தினை அதிபரிடம் தெரிவித்து அதற்கான அனுமதியைப் பெறவேண்டும் எனவும் அவர் கூறினார்.

- **உரைப்பகுதியைக் கொண்டு விடை எழுதுக.**

(i) மேலுள்ள உரைப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலையின் பெயர் யாது?

.....................................................................................................

(ii) மரங்களை நடுவதற்குத் தலைமை வகித்தவர் யார்?

.....................................................................................................

(iii) இந்த மரங்களை நடும்போது சுமதியும் நண்பர்களும் எந்தத் தரத்தில் கல்வி கற்றனர்?

.....................................................................................................

(iv) பாடசாலையின் பிரதான மண்டபத்தின் இரண்டு சுவர்களில் எவற்றை வரைய வேண்டுமென தர்சினி யோசனை கூறினாள்?

.....................................................................................................

(v) மாணவர்களின் யோசனைக்கு வகுப்பாசிரியை இறுதியில் யாது கூறினார்?

.....................................................................................................

.....................................................................................................

(vi) 'பழைய' என்பதன் எதிர்க்கருத்துச் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது என்ன?

.....................................................................................................

(vii) 'மலர்கள்' என்பதன் ஒத்த கருத்துச் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது என்ன?

.....................................................................................................

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்துக்கும் பொருந்தும் சரியான பயனிலைச் சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து **அதன் கீழே கோடிடுக.**

(i) ஆசிரியர்கள் எங்களுக்குச் சரியான பாதையைக் ............(காட்டினார். / காட்டினார்கள்.)

(ii) அருணன் அம்மாவுடன் தினமும் சந்தைக்குச் ............(செல்கின்றார்கள். / செல்கின்றான்.)

(iii) தேனீக்களும் வண்ணத்துப்பூச்சிகளும் தேனைக் ............ (குடிக்கின்றன. / குடிக்கின்றது.)

(iv) அது சுதந்திரமாகப் பறந்து ............ (சென்றது. / சென்றன.)

(v) அவர்கள் சிறுவர்களுக்குப் புத்திமதி ............ (கூறினார். / கூறினார்கள்.)

3. பின்வரும் வாக்கியங்களை இறந்த காலமாக மாற்றி எழுதுக.

(i) அதிகாலையிலேயே தீபன் விளையாட்டு மைதானத்துக்கு வருகிறான்.

..................................................................................................

(ii) நான் பேராதனைப் பூங்காவைப் பார்க்கப் போகிறேன்.

..................................................................................................

4. பின்வரும் ஒவ்வொரு பெயர்ச்சொல்லுக்கும் உரிய பெயர்ச்சொல் வகையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) நூலகம் : ..................................................

(ii) புத்தகங்கள் : ..................................................

5. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுத்துப்பிழைகள் கொண்ட இரண்டு சொற்கள் உள்ளன. அந்தச் சொற்களை மட்டும் திருத்தி உரிய புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) வைத்தியர் நோயாலியை பறிசோதனை செய்தார்.

.................................... ....................................

(ii) ஆசிரியரின் அறிவுறை பயணுள்ளதாக இருந்தது.

.................................... ....................................

6. தரப்பட்டுள்ள இணைமொழிச் சொற்களைப் பூரணப்படுத்துக.

(i) மூலை : ..................................................

(ii) காடு : ..................................................

7. சரியான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) படர்க்கை இறந்தகாலம் பன்மை வினைச்சொல் (விழுந்தது / விழுந்தன / விழுகின்றன)

..................................................

(ii) தன்மை ஒருமை நிகழ்காலம் வினைச்சொல் (சாப்பிடுகிறேன் / சாப்பிட்டனர் / சாப்பிட்டேன்)

..................................................

8. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உரிய இடங்களில் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

| |
|---|
| இந்தப் புத்தகத்தில் பல வினாக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன நீங்கள் 5ஆம் பக்கத்தில் உள்ள வினாவை வாசித்தீர்களா |

9. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

அறிக்கை / அனைவருக்கும் / பற்றிய / மிகவும் / வானிலை / பயனுள்ளதாகும்

..................................................................................................


10. ஒவ்வொரு உருவுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்டுள்ள கூட்டினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i)



| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(ii)



| | | | |
|---|---|---|---|
| | | | |

11. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) in / Farmer / paddy / works / field / the

..........................................................................................................

(ii) school / come / bicycle / to / I / by

..........................................................................................................

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

(i) River : ................................ (ii) National Anthem : ....................................


13. 'ஷிஷ்யாவ (ශිෂ්‍යාව)' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

..........................................................................................................

14. பின்வரும் வாக்கியத்தைச் சிங்களத்தில் கூறும் முறையைத் **தமிழில்** எழுதுக.

கிளி பச்சை நிறம் : ..........................................................................................

15. பின்வரும் எண்சட்டத்தில் குறிப்பிடப்படும் எண்ணை எழுத்தில் எழுதுக.




..........................................................

16. 24537, 24735, 24375 என்னும் **மூன்று** எண்களையும் ஏறுவரிசைப்படி ஒழுங்குமுறையில் எழுதுக.
................................, ........................................, ................................................

17. 0.7 இனைப் பத்தின் பங்காக எழுதுக. ................................................

18. இந்தக் கட்டத்தினுள் உள்ள இலக்கங்களினால் உருவாக்கக்கூடிய நான்கு இலக்கங்கள் கொண்ட சிறிய எண்ணுக்கும் பெரிய எண்ணுக்கும் இடையேயான வித்தியாசம் எவ்வளவு?

| | |
|---|---|
| 7 | 0 |
| 6 | 4 |

................................................

19. இந்த எண்கோலத்தில் அடுத்து வரும் **இரண்டு** எண்களை எழுதுக. 1, 3, 9, 27, ........., .........

20. 


உருவில் உள்ள பாத்திரம் A இல் 1 $l$ நீரும், பாத்திரம் B இல் 500 ml நீரும் உள்ளன. இரண்டு பாத்திரங்களிலும் நீரின் அளவு சமமானதாக இருப்பதற்கு பாத்திரம் A இலிருந்து பாத்திரம் B இற்குள் ஊற்ற வேண்டிய நீரின் அளவு எவ்வளவு?

.................................... ml

21. அனுராதபுரத்திலிருந்து மு.ப.10.00 மணிக்குப் பயணத்தை ஆரம்பித்த பேருந்து அதே நாள் பி.ப. 3.45 இற்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. பேருந்து அந்தப் பயணத்துக்காக எடுத்த நேரம் மணித்தியாலங்கள், நிமிடங்களில் எவ்வளவு?

................. மணித்தியாலங்கள் .................நிமிடங்கள்

22. ஒருவருக்கு 6 வீதம் 636 புத்தகங்களை எத்தனை மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்?

....................................

23. ஒரு மூடையில் 12 kg 500 g அரிசி இருந்தது. அதற்குள் மேலும் 8 kg 750 g அரிசியை இட்டால் மூடையில் உள்ள அரிசியின் மொத்த நிறை எவ்வளவு?

: .................... kg .................... g

24. சதுர வடிவுடைய 6 முகங்களைக் கொண்ட திண்மப் பொருளில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

: ..............................................

25. 5 m நீளமுள்ள றிபன் ஒன்றிலிருந்து 3 m 75 cm நீளமுள்ள றிபன் வெட்டி அகற்றப்பட்டது. எஞ்சியுள்ள றிபனின் அளவு யாது?

: .................... m .................... cm

- கடை ஒன்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விலைப்பட்டியல் கீழே காட்டப்பட்டுள்ளது. அவ் விலைப்பட்டியலுக்கு ஏற்ப பின்வரும் **26, 27** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| பொருள்கள் | 1 kg விலை ரூபாய் | சதம் |
|---|---|---|
| அரிசி | 250 | 00 |
| சீனி | 220 | 00 |
| பருப்பு | 360 | 00 |
| கிழங்கு | 120 | 00 |

**26.** 3 kg அரிசியும் 500 g பருப்பும் வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

: ..............................................


**27.** 250 g சீனியும் 2 kg கிழங்கும் வாங்கும் ஒருவர் பணத்தைச் செலுத்துவதற்கு 500 ரூபாய் தாளைக் கொடுத்தால் அவருக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

: ..............................................

28. ஒரு வாளியில் 6 *l* 500 ml நீரை ஊற்ற முடியும். இப்போது அதில் 2 *l* 650 ml நீர் உள்ளது. வாளியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவைப்படும்?

: ............... *l* ...............ml

29. பின்வரும் வரைபில் மாணவர் குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவரும் மிகவும் விரும்பும் விளையாட்டுக்கள் பற்றிய தகவல்கள் காட்டப்பட்டுள்ளன. எனினும் வலைப்பந்து விளையாட்டை விரும்புவோரின் எண்ணிக்கை மட்டும் வரைபில் காட்டப்படவில்லை.




(i) கிரிக்கெட் விளையாட்டைவிடக் கரப்பந்து விளையாட்டை எத்தனை மாணவர்கள் கூடுதலாக விரும்புகின்றனர்?

: ..............................

(ii) குழுவில் 60 மாணவர்கள் இருந்தால் வலைப்பந்து விளையாட்டை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

: ..............................

- **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. கொடியில் பூக்கும் மலர்
(1) மல்லிகை (2) அலரி (3) பவளமல்லிகை

31. இலங்கையில் கடற்கரையோரத்தை எல்லையாகக் கொண்ட மாகாணங்களின் எண்ணிக்கை
(1) 4 ஆகும். (2) 5 ஆகும். (3) 6 ஆகும்.

32. முட்டை இடாத பிராணிகளை மட்டும் உள்ளடக்கிய விடை எது?
(1) பாம்பு, முயல் (2) எலி, அணில் (3) ஆமை, ஓணான்

33. தீங்கு விளைவிக்கும் கிருமிகளிலிருந்து பயிர்ச் செய்கையைப் பாதுகாப்பதற்குத் தேவையான திரவத்தைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய தாவரம்
(1) வேம்பு (2) பலா (3) தேக்கு

34. இலங்கையரிடம் நாட்டுப் பற்றை ஏற்படுத்துவதற்கு கவிதை நூல்கள் பலவற்றை இயற்றிய எழுத்தாளர்
(1) சேர் ஆர்தர் சீ. கிளார்க் (2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி (3) எஸ். மகிந்த தேரர்

35. இலைக்கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தக்கூடியவற்றை மட்டும் கொண்ட விடை யாது?
(1) பொன்னாவரை, அகத்திக்கீரை, கங்குன்
(2) சாத்தாவாரி, வல்லாரை, முடக்கொத்தான்
(3) சாறணை, தேங்காய்ப்பூக்கீரை, கண்டங்கத்தரி

36. கீழே தரப்பட்டுள்ள எந்தக் கலவையைக் காந்தம் ஒன்றைப் பயன்படுத்தி வேறுபடுத்த முடியும்?
(1) அலுமினியம் ஆணிகளும் பிளாஸ்ரிக் பொத்தான்களும்
(2) இரும்புத்தூளும் மணலும்
(3) கண்ணாடித் துண்டுகளும் றிஜிபோம் துண்டுகளும்

37. பாதசாரிகளுக்கு 'பாதையைக் கடத்தலாகாது' என்ற செய்தியை வழங்கும் ஒளிச் சமிக்ஞை இந்த உருவில் காட்டப்பட்டுள்ளது. அந்த ஒளிச் சமிக்ஞையில் ஒளிரும் நிறம் யாது?



(1) சிவப்பு (2) பச்சை (3) மஞ்சள்


38. சுகாதாரப் பாதுகாப்புப் பற்றிக் கவனத்தில் கொள்ளும்போது பற்தூரிகை, துவாய், கோப்பை, உறங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் தலையணை ஆகிய பொருள்களைப் பயன்படுத்துவது பற்றிய சரியான கூற்று எது?
(1) அனைத்தும் பொதுவாகப் பயன்படுத்தப்பட வேண்டியவை ஆகும்.
(2) அனைத்தும் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்பட வேண்டியவை ஆகும்.
(3) பற்தூரிகை மட்டும் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்பட வேண்டியது ஆகும்.

39. சுத்தமான நீர் சூடாகிக் கொதிக்கும் சந்தர்ப்பத்தின்போது
(1) நீராவி வெளியேறும். (2) குமிழிகள் வருவது நின்றுவிடும். (3) நிறம் வேறுபடும்.

40. முற்காலத்தில் பெண்கள் பங்குபற்றாத கிராமிய விளையாட்டு எது?
(1) பல்லாங்குழி (2) தாயம் (3) போர்த்தேங்காய் அடித்தல்

41. 'வீதி விபத்துக்களும் முதலுதவியும்' பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுவதற்காக அழைப்பு விடுவிப்பதற்கு மிகவும் பொருத்தமான **இரண்டு** நிறுவனங்கள்
(1) இலங்கைப் பொலிஸ், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை
(2) செஞ்சிலுவைச் சங்கம், பிரதேச செயலாளர் அலுவலகம்
(3) இலங்கைப் பொலிஸ், செஞ்சிலுவைச் சங்கம்

42.



ஒப்பமான தரை கரடுமுரடான தரை

எந்தத் தரையின் மீது தள்ளுதல் மிக இலகுவாக உள்ளது என்பதை அறிந்து கொள்வதற்காக மாணவர்கள் தயாரித்த மேலுள்ள செயற்பாட்டைத் திருத்த வேண்டுமென ஆசிரியர் கூறினார். அதற்காக மாணவர்கள் முன்வைத்த ஆலோசனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - இரண்டு பெட்டிகளும் சமமான நிறையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
B - இரண்டு பெட்டிகளும் நிலத்தைத் தொடும் அளவுகள் சமமானதாக இருத்தல் வேண்டும்.
C - இரண்டு பெட்டிகளும் சமமான உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சரியான ஆலோசனைகளை மட்டும் கொண்ட விடை எது?
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்

43. பின்வரும் முறைகளுள் செய்தி ஒன்றை விரைவாக வழங்கக்கூடிய முறை எது?
(1) கடிதம் ஒன்றைத் தபாலில் அனுப்புதல்
(2) தந்தி மூலம் செய்தி அனுப்புதல்

සියලුම විභාගයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

**44.** தாவரங்களில் இருந்து கிடைக்கும் பழங்களின் செயல் **அல்லாதது**
(1) விதைகளைப் பாதுகாத்தல்
(2) முதிர்ந்த விதைகள் முளைக்கும்போது தேவையான போசணையை வழங்குதல்
(3) விதைகள் பரவுவதற்கு உதவுதல்

**45.** வல்லாரைச் சலாது தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட படிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
A - மெல்லிதாக அரிந்த வல்லாரையை நன்றாகக் கழுவுதல்
B - சுத்தம் செய்யப்பட்ட வெங்காயம், பச்சை மிளகாய் என்பவற்றை மெல்லிதாக அரிந்தெடுத்தல்
C - மெல்லிதாக அரிந்தெடுக்கப்பட்ட பொருள்களுடன் தேங்காய்ப்பூ, உப்பு, எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றைச் சேர்த்தல்
இங்கு **பிழையாகச்** செய்யப்பட்ட படிமுறை எது?
(1) A (2) B (3) C

**46.** கண்டல் தாவரங்கள் பற்றிய சரியான கூற்று எது?
(1) உலர் வலயத்தில் குறைந்தளவு நீருள்ள மண்ணில் வளரும் தாவரங்கள் ஆகும்.
(2) மலைப் பிரதேசங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட தாவரங்கள் ஆகும்.
(3) கடற்கரைக்கு அண்மையிலுள்ள சேற்று நிலங்களில் அதிக அளவில் வளரும் தாவரங்கள் ஆகும்.

**47.** பின்வருவனவற்றுள் எந்தச் செயற்பாட்டினால் வேறு நபர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகக் கூடும்?
(1) பேருந்தின் உள்ளே பெருஞ்சத்தத்தோடு பாடல்களை ஒலிக்கச் செய்தல்
(2) பேருந்தின் உள்ளே ஏறுவதற்குத் தமது முறை வரும்வரை பயணிகள் வரிசையில் காத்திருத்தல்
(3) அதிக அளவு வாகனங்கள் பயணிக்கும் ஒரு வீதியில் மஞ்சள் / வெள்ளைக் கோட்டின் மீது மட்டும் வீதியைக் கடத்தல்

**48.** பின்வரும் கூற்றுக்களில் மிகச்சரியான கூற்று எது?
(1) சுத்தமான நீருக்கு குறிப்பிட்ட மணம் உண்டு.
(2) சுத்தமான நீருக்கு குறிப்பிட்ட நிறம் உண்டு.
(3) சுத்தமான நீருக்கு குறிப்பிட்ட கனவளவு உண்டு.

**49.** கடலில் பயணம் செய்யும் கப்பல் ஒன்று பெரிய ஆற்றினுள் புகும்போது கப்பலுக்கு யாது ஏற்படும்?
(1) கடலில் மூழ்கியிருந்த மட்டத்தைவிட ஓரளவு மேலே செல்லும்.
(2) கடலில் மூழ்கியிருந்த மட்டத்தைவிட ஓரளவு கீழே மூழ்கும்.
(3) கடலிலும் ஆற்றிலும் ஒரே அளவில் மூழ்கி இருக்கும்.

**50.** பின்வருவனவற்றுள் ஏப்ரன் ஒன்றை அலங்கரிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய அலங்காரத் தையல் முறை எது?
(1) நூலோடல் (2) கரையைத் தைத்தல் (3) சங்கிலித் தையல்


**51.** மருத்துவப் (ஔசத) பெறுமானமுள்ள செடியாக வளரும் இலங்கைக்கே உரித்தான தாவரம்
(1) கொடபறை (2) ஹீன்போவிட்டியா (3) கறிவேப்பிலை

**52.** ஒரு பாத்திரத்தில் நன்கு வளர்ந்திருந்த இஞ்சிச் செடி ஒன்றின் இலைகள் பகலில் கடும் வெயில் படும் போது சுருங்குவதும் மாலையில் மீண்டும் விரிவடைவதும் அவதானிக்கப்பட்டது. இதற்குக் காரணமாக இருக்கக்கூடியது யாது?
(1) இலைகளில் இருந்து நீர் ஆவியாதலைக் குறைப்பதற்காகும்.
(2) மண்ணில் உள்ள பசளையை நன்கு உறிஞ்சுவதற்காகும்.
(3) வண்ணத்துப்பூச்சி போன்ற பிராணிகள் இலைகளில் முட்டை இடுவதைத் தவிர்ப்பதற்காகும்.

**53.** சிக்குன்குன்யா நோய் பரவுவது
(1) அசுத்தமான நீரைப் பருகுவதனால் ஆகும்.
(2) நோய்க்காவி நுளம்புகள் கடிப்பதனால் ஆகும்.
(3) நோய்க்காவிகளான தனிநபர்களினால் ஆகும்.


**54.** பின்வருவனவற்றுள் உணவு வீணாகுதல் நிகழும் சந்தர்ப்பம் எது?
(1) எலுமிச்சம் பழத்தினால் ஊறுகாய் தயாரித்தல்
(2) மீன்களை எடுத்துச்செல்லும் பெட்டிகளில் ஐஸ்கட்டிகளை இடுதல்
(3) ஒருவர் தனக்குத் தேவையான அளவைவிட மேலதிகமான உணவை எடுத்தல்

**55.** பின்வரும் உபகரணத் தொகுதியைப் பயன்படுத்தி அவதானிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவது யாது?




(1) சூரிய ஒளியிலிருந்து வெப்பத்தைப் பெற்று பொருள்களைச் சூடாக்குதல்
(2) பூமியில் இரவு, பகல் வேறுபாடு ஏற்படுதல்
(3) வானத்தில் தோன்றும் வானவில்லின் பல்வேறு நிறங்களை இனம் காணுதல்

**56.** நல்ல விளைச்சலைப் பெறுவதற்காகப் பயிரிடுவதற்கு மிகப் பொருத்தமான விதைகள் அடங்கிய பாத்திரம் எது?




**57.** விற்றமின் 'A' ஐ அதிக அளவில் கொண்ட பழ வகை
(1) கொய்யா (2) பப்பாளி (3) நெல்லி

**58.** பழுதடைந்த தேங்காயின் பண்பு அல்லாதது
(1) துர்நாற்றம் வீசுதல் (2) பாசித்தன்மை இருத்தல் (3) அந்துப் பூச்சிகள் இருத்தல்

**59.** சமூக விரோதச் செயலைக் கண்டவுடன் அது பற்றி அறிவிக்க வேண்டிய பொலிஸ் அவசர அழைப்பு இலக்கம் யாது?
(1) 119 (2) 1911 (3) 1929

**60.** பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியைப் பார்ப்பதற்கு நிமலன் விளையாட்டு மைதானத்துக்குச் சென்றான். அப்போது 100 மீற்றர் ஓட்டப் போட்டி ஆரம்பமாக இருந்தது. அப்போட்டியில் நிமலனின் அண்ணாவும் பங்குபற்றுவதாக இருந்தது. நிமலனாக உங்களைக் கருதிக் கொண்டு அதன் பின்னர் நிகழ்ந்தவை பற்றி விவரிக்கும் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) ..............................................................................................

..............................................................................................

(2) ..............................................................................................

..............................................................................................

(3) ..............................................................................................

..............................................................................................

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න